بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡم   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡم   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

# பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 26 ஜூலை 2019 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்றும் நான் பத்ரி சஹாபாக்களைப் பற்றியே எடுத்துரைப்பேன். முதலில் கூறப்போகின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் முஸாஹிர் பின் ராஃபி ஆகும். ஹஸ்ரத் முஸாஹிர் அவர்களின் தகப்பனார் பெயர் ராஃபி பின் அதீ ஆகும். அன்னார் பத்ர் அவர்கள் உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஏனைய போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். அன்னார் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள்.

அன்னாரது ஷஹாதத் தொடர்பான சம்பவம் இவ்வாறு எடுத்துக் கூறப்படுகின்றது. யஹ்யா பின் சஹல் பின் அபூ ஹஸ்மா கூறுகின்றார்: ஹஸ்ரத் முஸாஹிர் பின் ராஃபி ஹாரிஸி எனது தந்தையாரிடம் சிரியா நாட்டிலிருந்து ஆற்றல் வாய்ந்த சில வேலையாட்களை தன்னிடம் அழைத்து வந்தார்கள். அன்னாரின் விலை நிலங்களில் பணி செய்வதற்காக அவர்களை அன்னார் அழைத்து வந்தார்கள்.

அன்னார் கைபரை வந்தடைந்ததும் அங்கு யூதர்கள் அந்த வேலையாட்களை ஹஸ்ரத் முஸாஹிர் அவர்களை கொலை செய்வதற்கு தூண்டி விடத் தொடங்கினார்கள். இரண்டு மூன்று கத்தி குத்து அன்னார் மீது விழும்படி தூண்டி விட்டார்கள். ஹஸ்ரத் முஸாஹிர் அவர்கள் கைபரிலிருந்து வெளியேறினார்கள். அந்த இடத்தில் அந்த வேலையாட்கள் ஹஸ்ரத் முஸாஹிர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். வயிற்றைக் கிழித்து அன்னாரை ஷஹீதாக்கி விட்டார்கள். பின்னர் அந்த மக்கள் கைபரை நோக்கி திரும்பிச் சென்று விட்டார்கள். அப்போது யூதர்கள் அவர்களுக்க செல்வத்தையும் உணவையும் வழங்கி அனுப்பி விட்டார்கள். அதன் மூலம் அவர்கள் சிரியா நாட்டை திரும்பிச் சென்றடைந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்களுக்கு இந்த தகவல் கிடைத்தவுடன் அன்னார் கூறினார்கள்: நான் கைபரை நோக்கி செல்ல உள்ளேன். அங்குள்ள செல்வங்களை பங்கிட்டு கொடுக்க உள்ளேன். அதன் எல்லைகளை வரையறுக்க உள்ளேன். பூமியில் நிலங்களின் எல்லைகளை வரையறுக்க உள்ளேன். அதாவது அதற்கு பழிவாங்கப்படும். மேலும் யூதர்களை அங்கிருந்து வெளியேற்ற இருக்கின்றேன். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களைக் குறித்து கூறினார்கள்: அல்லாஹ் உங்களுக்கு தங்குமிடத்தை வழங்காதவரை நானும் உங்களுக்கு தங்குமிடத்தை வழங்க மாட்டேன். அல்லாஹ் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற அனுமதித்து விட்டான். ஆக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பின்னர் அவ்வாறே செய்தார்கள். ஹிஜ்ரி 20 வது ஆண்டு ஹஸ்ரத் முஸாஹிர் அவர்களின் ஷஹாதத் சம்பவம் நிகழ்ந்தது.

அடுத்து இடம்பெற இருக்கின்ற சஹாபியின் ஹஸ்ரத் மாலிக் பின் குதாமா ஆகும். ஹஸ்ரத் மாலிக் பின் குதாமா அவர்களின் தந்தையார் பெயர் குதாமா பின் அர்ஃபஜா ஆகும். ஹஸ்ரத் மாலிக் தனது ஒரு சகோதரரான ஹஸ்ரத் முன்ஸிர் பின் குதாமா அவர்களுடன் இணைந்து பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தார்கள்.

அடுத்து இடம்பெற்றுள்ள சஹாபியின் பெயர் ஹஸ்ரத் ஹுரைம் பின் ஃபாதிக் ஆகும். ஹஸ்ரத் ஹுரைம் பின் ஃபாதிக் அவர்கள் பனூ அஸது கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். ஹஸ்ரத் ஹுரைம் பின் ஃபாதிக் தனது சகோதரரான ஹஸ்ரத் ஸப்ரா பின் ஃபாதிக் அவர்களுடன் இணைந்து பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் ஹுரைம் அவர்கள் தமது மகனுடன் கூஃபா சென்று விட்டார்கள். இவர்கள் இருவரும் ரக்கா என்ற மிகவும் பிரபல்யமான நகரத்திற்கு இடம் பெயர்ந்து சென்று விட்டார்கள். அதே இடத்தில் இவர்கள் இருவரும் ஹஸ்ரத் அமீர் முஆவிய்யாவின் ஆட்சிக் காலத்தில் மரணமடைந்தார்கள்.

அடுத்து குறிப்பிடவிருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் முஃமிர் பின் ஹாரிஸ் ஆகும். ஹஸ்ரத் முஃமிர் பின் ஹாரிஸ் அவர்களின் தொடர்பு குரைஷிய கோத்திரமான பனூ ஜமாவைச் சார்ந்ததாக இருந்தது. அன்னாரின் தந்தையார் பெயர் ஹாரிஸ் பின் முஃமிர் ஆகும். அன்னாரின் தாயார் பெயர் கதீலா பின்த் மல்வூன் ஆகும். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களின் சகோதரியாக இருந்தார்கள். ஹஸ்ரத் முஃமிர் அவர்களுக்கு மேலும்

இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்களின் பெயர் ஹாதிப் மற்றும் ஹிதாப் ஆகும். இந்த மூவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு செல்வதற்கு முன்பாகவே இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். ஹஸ்ரத் முஃமிர் அவர்களை ஆரம்பத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் கணக்கிடப்படுகின்றது.

குதாமா அவர்களின் மகளாகிய ஹஸ்ரத் ஆயிஷா அவர்களிடமிருந்து அறிவிப்பு வருகின்றது. அதாவது பனூ மழ்வூன் கோத்திரத்தின் ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் குதாமா, ஹஸ்ரத் அப்துல்லாஹ், ஹஸ்ரத் சாயிப் பின் உஸ்மான் பின் மழ்வூன் மற்றும் முஃமிர் பின் ஹாரிஸ் ஆகியோர் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தார்கள். அப்போது அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சல்மா அஜ்லானி அவர்களின் வீட்டில் தங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் முஆமிர் அவர்களுக்கும் ஹஸ்ரத் முஆஸ் பின் அஃப்ரா அவர்களுக்கும் இடையில் சகோதரத்துவ பந்தத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் முஆமிர் பின் ஹாரிஸ் அவர்கள் பத்ர் போர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் முஆமிர் பின் ஹாரிஸ் அவர்களின் மரணம் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் கிலாகட்டத்தில் ஹிஜ்ரி 23 ஆவது ஆண்டு நிகழ்ந்தது.

அடுத்த சஹாபியின் பெயர் ஸுஹைர் பின் ராஃபி ஆகும். ஹஸ்ரத் ஸுஹைர் அவர்கள் அன்ஸார் கோத்திரமான அவ்ஸ் குடும்பத்தின் பனூ ஹாரிஸா பின் ஹாரிஸா உடன் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் ஹுஸைர் பின் ராஃபி அவர்களின் மகனின் பெயர் அஸீது ஆகும். அன்னாருக்கும் சஹாபி என்ற அந்தஸ்தைப் பெறும் பாக்கியம் கிடைத்திருந்தது. ஹஸ்ரத் ஸுஹைர் அவர்கள் ராஃபி பின் கதீஜ் அவர்களின் சிறிய தந்தையாக இருந்தார்கள். ஹஸ்ரத் ஸுஹைர் அவர்களின் மனைவியின் பெயர் ஃபாத்திமா ஆகும். அன்னார் பனூ அதீ பின் கனம் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் முஸாஹிர் பின் ராஃபி அவர்கள் ஹஸ்ரத் ஸுஹைர் அவர்களின் உடன் பிறந்த சகோதரராக இருந்தார்கள். இரண்டு சகோதரர்களும் பத்ர் போரில் பங்கு பெறும் நற்பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் ஸுஹைர் அவர்கள் உக்பா சானியா பைஅத்தின் போதும், பத்ர் போர் மற்றும் உஹது போரிலும் மற்றும் ஏனைய அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார்கள்.

அடுத்து நான் கூறப்போகும் சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அம்ர் பின் அயாஸ் ஆகும். ஹஸ்ரத் அம்ர் அவர்கள் யமன் நாட்டைச் சார்ந்தவராக இருந்தார்கள். மேலும் அன்ஸார்களின் பனூ லவ்ஸான் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். அன்னாரின் தந்தையார் பெயர் அயாஸ் பின் அம்ர் ஆகும்.

ஹஸ்ரத் அம்ர் அவர்கள் பத்ர் மற்றும் உஹது போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் அவர்கள் ஹஸ்ரத் ரபீ பின் அயாஸ் மற்றும் ஹஸ்ரத் வராக்கா பின் அயாஸ் ஆகியோரின் சகோதரராக இருந்தார்கள். இந்த மூன்று சகோதரர்களுக்கும் பத்ர் போரில் பங்கு பெறும் நற்பாக்கியம் கிடைத்திருந்தது.

அடுத்து இடம் பெறும் சஹாபியின் பெயர் ஹஸ்ரத் மத்லஜ் பின் அம்ர் ஆகும். ஹஸ்ரத் மத்லஜ் பின் அம்ர் அவர்களின் பெயர் மத்லாஜ் என்றும் வந்துள்ளது. அன்னார் பனூ சலீமின் குடும்பமான பனூ ஹிஜ்ர் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் மத்லஜ் பத்ர் போரில் தனது இரண்டு சகோதரர்களான ஹஸ்ரத் சக்ஃப் பின் அம்ர் மற்றும் ஹஸ்ரத் மாலிக் பின் அம்ர் ஆகியோருடன் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் மத்லஜ் பின் அம்ர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர், உஹது மற்றும் அதன் பிறகு நடைபெற்ற அனைத்துப் போர்களிலும் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் அமீர் முஆவிய்யாவின் ஆட்சிக் காலத்தில் ஹஸ்ரத் மத்லஜ் பின் அம்ர் அவர்களின் மரணம் ஹிஜ்ரி 50 வது ஆண்டில் நிகழ்ந்தது.

அடுத்து இடம்பெறும் சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுஹைல் ஆகும். ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தந்தையார் பெயர் சுஹைல் பின் அம்ர் ஆகும். மற்றும் தாயார் பெயர் ஃபாஹ்த்தா பின்த் அம்ர் ஆகும். அன்னாரின் சகோதரரின் பெயர் அபூ ஜுன்தல் ஆகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுஹைல் அபிஸீனாவிலிருந்து திரும்பிய உடன் அன்னாரின் தந்தையார் அன்னாரைப் பிடித்து அன்னாரின் மார்க்கத்திலிருந்து விலகச் செய்து விட்டார்கள். அதாவது அன்னார் மீது பலவந்தம் செய்தார். அன்னார் இணை வைப்பவர்களுடன் இணைந்து முஸ்லிம்களை எதிர்கொள்வதற்கு பத்ர் மைதானத்தை நோக்கிச் சென்றார்கள். பத்ர் இடத்தில் முஸ்லிம்களும் இணை வைப்பவர்களும் எதிர் எதிரே வந்தபோது இரு படைகளும் ஒருவர் மற்றவரை எதிர்கொண்ட போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுஹைல் அவர்கள் முஸ்லிம்களின் பக்கம் வந்து விட்டார்கள். போருக்கு முன்பாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து விட்டார்கள். இவ்வாறு அன்னார் இஸ்லாத்தின் நிலையில் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். அப்போது அன்னாரின் வயது 27 ஆக இருந்தது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுஹைல் அவர்கள் பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தமது தந்தையாருக்கு பாதுகாப்பு பெற்றார்கள். அதாவது அன்னாரை மன்னிக்கும்படியும், அன்னாருக்கு அடைக்கலம் அளிக்கும்படியும் வேண்டினார்கள்.

அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் என் தந்தைக்கு பாதுகாப்பு வழங்குவீர்களா? என்று கேட்டார்கள். அப்போது அவர் அல்லாஹ்வின் பாதுகாப்பின் காரணமாக பாதுகாப்பாக உள்ளார். அவர் வெளியே வந்து விடட்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

பின்னர் தம்மைச் சுற்றியிருந்த நபர்களிடம் சுஹைல் பின் அம்ர் அவர்களைப் பார்ப்பவர் அவரை ஏளனமாகப் பார்க்க வேண்டாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக சுஹைல் அறிவாளியும், கண்ணியமுமிக்க நபருமாவார். சுஹைல் போன்ற நபர் இஸ்லாத்தைப் பற்றி அறியாமல் இருக்க முடியாது என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுஹைல் எழுந்து தனது தந்தையாரிடத்தில் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நடந்த உரையாடலைப் பற்றி அன்னாரிடம் கூறினார்கள்.

மேலும் சுஹைல் அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! தான் முதுமை மற்றும் இளமையில் நன்மை செய்தவராக இருந்ததாக கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தந்தையான சுஹைல் அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் சுஹைல் அவர்கள் ஈமான் கொண்ட பிறகு அல்லாஹ் இஸ்லாத்தில் எனது மகனுக்கு அதிக நன்மைகளை வைத்திருக்கின்றார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் யமாமா போரில் பங்கு பெற்றார்கள். மேலும் அதே போரில் ஹிஜ்ரி 12 வது ஆண்டு ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஷஹீதானார்கள். அப்போது அன்னாரது வயது 38 ஆக இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் காலகட்டத்தில் ஹஜ் செய்வதற்காக மக்கா சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுஹைல் அவர்களின் தந்தையாகிய ஹஸ்ரத் சுஹைல் பின் அம்ர் அவர்கள் மக்காவில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சந்திக்கச் சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அன்னாரின் மகனாகிய ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் மரணத்திற்கான இரங்கலை தெரிவித்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் சுஹைல் அவர்கள் கூறினார்கள்: ஷஹீது தனது குடும்பத்தினரில் 70 நபர்களுக்கு பரிந்துரை செய்வார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய செய்தி எனக்கு கிடைத்துள்ளது. எனவே எனது மகன் என்னை விட்டு விட்டு வேறு பெயரை கூற மாட்டான் என்று நான் நம்புகின்றேன். அதாவது நான் மரணித்த பிறகு எனது பாவமன்னிப்பிற்காக அவர் பரிந்துரை செய்வார்.

இரண்டாவது கருத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பஹ்ரைன் பகுதியில் 88 வது வயதில் ஷஹீதானார்கள். அந்தப் பகுதி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 12 வது ஆண்டு வெற்றி கொள்ளப்பட்டது. எவ்வாறிருப்பினும் இரண்டு அறிவிப்புகள் நமக்கு கிடைக்கின்றன.

ஹஸ்ரத் யஸீது பின் ஹாரிஸ் என்ற சஹாபியைப் பற்றி அடுத்து நான் எடுத்துக் கூறுவேன். ஹஸ்ரத் யஸீது பின் ஹாரிஸ் அன்ஸாரின் கஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ அஹ்மர் பின் ஹாரிஸா குடும்பத்தைச் சார்ந்தவர் ஆவார். ஹஸ்ரத் யஸீது அவர்களுக்கு பத்ர் போரில் பங்கு பெறும் நற்பாக்கியம் கிடைத்தது. இருவருமே அப்போரில் ஷஹாதத்திற்கான அந்தஸ்தைப் பெற்றார்கள்.

அடுத்து எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உமைர் பின் ஹமாம் ஆகும். ஹஸ்ரத் உமைர் பின் ஹமாம் அவர்கள் அன்ஸாரின் கிளை கோத்திரமான பனூ சல்மாவின் பனூ ஹராம் பின் கஅப் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமைர் பின் ஹவாம் மற்றும் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் மத்லவி ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இவர்கள் இருவரும் பத்ர் நாளன்று ஷஹீதானவர்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள்.

பத்ர் போரின்போது இணை வைப்பவர்கள் நெருங்கி வந்தார்கள். அப்போது வானம் மற்றும் பூமியின் பரப்பளவு கொண்ட சொர்க்கத்திற்காக முன்னோக்கிச் செல்லுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உமைர் பின் ஹமாம் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! வானம் மற்றும் பூமிக்கு சமமான பரப்பளவைக் கொண்ட சுவர்க்கத்தைப் பற்றியா நீங்கள் கூறிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! என்று பதிலளித்தார்கள். அதற்கு அன்னார், சபாஷ், சபாஷ் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் சபாஷ், சபாஷ் என்று கூறிக் கொண்டிருக்கின்றீர்களே அதற்கான காரணம் என்ன? என்று வினவினார்கள். அதற்கு அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் சுவர்க்கவாசிகளைச் சார்ந்தவனாக ஆகி விட வேண்டும் என்ற ஆசையின் காரணமாக அவ்வாறு கூறுகின்றேன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீர் சுவர்க்கவாசிகளைச் சார்ந்தவராவீர் என்று கூறினார்கள். பின்னர் அன்னார் நிராகரிப்பாளர்களுடன் சண்டையிட்டு ஷஹீதாகி விட்டார்.

பத்ர் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் உமைர் பின் ஹமாம் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் அல்லாஹ்விடமிருந்து இறையச்சத்தை தவிர வேறு எந்தவொரு வழிப்பாதை உணவையும் எடுத்துச் செல்லவில்லை. மேலும் அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்வதில் நான் உறுதிப்பாட்டுடன் இருக்கின்றேன். நிச்சயமாக தக்வா உயர்ந்த விஷயமாகும். எல்லாவற்றையும் விட நேர்வழியின் பக்கம் வழிகாட்டக் கூடியதாகும். உயிருள்ள அனைவரும் அழியக்கூடியவர்களே.

இஸ்லாத்தில் அன்ஸார்களில் முதலில் ஷஹீதானவர் ஹஸ்ரத் உமைர் பின் ஹமாம் ஆவார்கள். அன்னாரை காலித் பின் ஆலம் என்பவன் ஷஹீதாக்கினான். சிலரின் பார்வையில் முதல் முதலில் ஷஹீதான அன்ஸாரி சஹாபி ஹஸ்ரத் ஹாரிஸா பின் கைஸ் ஆவார்கள். இரண்டு அறிவிப்புகள் உள்ளன. எவ்வாறிருப்பினும் இவர்கள் இவருவம் பத்ர் போர் ஷஹீதுகள் ஆவர்.

ஹஸ்ரத் ஹமீது அன்ஸாரி என்ற ஒரு சஹாபியைப் பற்றி நான் எடுத்துக் கூறுவேன். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் கூறுகின்றார்கள். மதீனாவில் கற்பகுதிகளைக் கொண்ட நிலத்தில் தண்ணீர் வழங்கக்கூடிய நீரூற்று ஒன்று இருந்தது. அது தொடர்பாக அன்னாருக்கும் ஒரு அன்ஸாரி நபருக்குமிடையில் சச்சரவு ஏற்பட்டது. இருவரும் பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் அந்தப் பிரச்சனை தீர்ப்பிற்காக வந்தது. அவர்கள் இருவரும் அந்த நீரூற்றிலிருந்து தத்தமது நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சி வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களிடம், சுபைர் அவர்களே! முதலில் நீங்கள் உங்கள் நிலத்திற்கு தண்ணீர் பெற்றுக் கொள்ளுங்கள். பிறகு அண்டை அயலாருக்கும் தண்ணீர் கொடுங்கள் என்று கூறினார்கள். மேலும் உங்களுக்குரிய பங்கையும் பெற்றுக் கொள்ளுங்கள். அவருக்கும் தண்ணீர் வழங்குங்கள் என்று கூறினார்கள். அந்த அன்ஸாரி இதனால் மிகவும் கோபமடைந்தார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் சுபைருக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்குகின்றீர்கள். ஏனென்றால் அவர் உங்களுடைய மாமியின் மகன் ஆவார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகம் இதனைக் கேட்டு மிகவும் சிவந்து விட்டது.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களிடம், முதலில் நான் கருணையின் அடிப்டையில் பேசினேன். இப்போது உரிமைக்கான விவகாரம் வந்து விட்டது. எனவே நீங்கள் உங்களது விளை நிலம் முழுவதும் நிறைந்து விடும் அளவிற்கு தண்ணீரை தடுத்து நிறுத்திக் கொள்ளுங்கள். உங்களது விளை நிலத்தில் தண்ணீரைப் பெருக்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களுக்கு அவர்களுக்குரிய முழு உரிமையை பெற்றுக் கொடுத்தார்கள். ஆனால் அதற்கு முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களிடம் தனது கருத்தை கூறியிருந்தார்கள். அதில் அன்னாருக்கும், அந்த அன்ஸாரிக்கும் போதுமான பங்கு இருந்தது. ஆனால் அன்ஸாரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கோபப்படுத்தியதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களுக்கு தெளிவான, சரியான தீர்ப்பை வழங்கி அவர்களுக்குரிய முழுமையான உரிமையை வழங்கி விட்டார்கள்.

உர்வா அவர்கள் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! இந்த வசனம் இந்த சம்பவம் தொடர்பாகவே இறங்கியது. அதாவது

فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتّٰى يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا فِيْٓ أَنْفُسِهِمْ حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيمًا

அதாவது உமது இறைவன் மீது ஆணையாக! அவர்கள் தங்களுக்கிடையில் ஏற்படும் சண்டை சச்சரவுகளில் உம்மை நீதி நெறி தீர்ப்பவராக ஆக்கிக் கொண்டு நீர் வழங்குகின்ற தீர்ப்பினால் தமது உள்ளங்களில் எந்த கஷ்டத்தையும் உணராமல் முழுமையாக கட்டுப்படாதவரை அவர்கள் ஒருபோதும் நம்பிக்கை கொண்டவர்களாக முடியாது.

அல் அஸாபா, அஸதுல் காபா மற்றும் சஹீஹ் புகாரியின் விரிவுரை இர்ஷாதுஸ் சாரி போன்றவற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் சுபைர் அவர்களுடன் சண்டை ஏற்பட்ட அந்த அன்ஸாரி சஹாபியின் பெயர் ஹஸ்ரத் ஹுமைர் அன்ஸாரி ஆகும். அவர் பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தார்.

எவ்வாறிருப்பினும் சில முறை ஷய்த்தான் ஒளிந்திருந்து தாக்குதல் நடத்துகின்றான். ஆனால் பத்ர் போர் சஹாபிகள் தொடர்பாக அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டதாக சாட்சி கூறி அறிவித்துள்ளான்.

ஹஸ்ரத் அம்ர் பின் மஆஸ் பின் நுஃமான் அஸீர் அவர்கள் ஒரு சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் அம்ர் அவர்களின் தந்தையார் பெயர் மஆஸ் பின் நுஃமான் ஆகும். அன்னாரின் தாயார் பெயர் கப்ஷா பின்த் ராஃபி ஆகும். ஹஸ்ரத் அம்ர் பின் மஆஸ் அன்ஸாரியின் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅது பின் மஆஸ் அவர்களின் சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்ஸாரி சஹாபியான ஹஸ்ரத் அம்ர் பின் மஆஸ் அவர்களுக்கும் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தடைந்த ஹஸ்ரம் உமைர் பின் அபீ வக்காஸ் அவர்களுக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் மஆஸ் அவர்கள் தமது சகோதரரான ஹஸ்ரத் சஅது அவர்களுடன் இணைந்து பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் மஆஸ் உஹது போரில் ஷஹீதானார்கள். ஷஹீதான போது அன்னாரது வயது 32 ஆக இருந்தது.

ஹஸ்ரத் மஸ்வூது பின் ரபீஆ பின் அம்ர் ஒரு சஹாபி ஆவார்கள். அன்னாரின் தொடர்பு காரா கோத்திரத்தைச் சார்ந்ததாக இருந்தது. அன்னாரின் தந்தையார் பெயர் ரபீஆ என்றும் ஆமிர் என்றும் கூறப்பட்டுள்ளது. அன்னாரின் ஒரு மகனின் பெயர் அப்துல்லாஹ் என்றும் வருகின்றது. அன்னாரின் குடும்பம் மதீனாவில் காரி என்று அழைக்கப்பட்டு வந்தது. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு வருவதற்கு முன்பே ஈமான் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸ்வூது பின் ரபீஆ அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த போது அன்னாருக்கும் ஹஸ்ரத் உபைது பின் தய்ஹான் ஆகியோருக்கிடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸ்வூது பின் ரபீஆ பத்ர் போரிலும், உஹது போரிலும், அகழ் போரிலும் மற்றும் ஏனைய அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹிஜ்ரி 30 ஆம் ஆண்டு அன்னாரது மரணம் நிகழ்ந்தது. அப்போது அன்னாரது வயது 60 ஐ விட அதிகமாக இருந்தது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அனைத்து சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அவர்களிடமிருந்த அனைத்து நன்மைகளையும் நம்மிடமும் நிலைபெறச் செய்வானாக.

இதன் பிறகு நான் சுருக்கமாக இதைக் கூற விரும்புகின்றேன். அதாவது அடுத்த ஜுமுஆ முதல் இன்ஷா அல்லாஹ் இங்கு பிரிட்டன் நாட்டின் ஆண்டு மாநாடு ஆரம்பமாக உள்ளது. அது எல்லா வகையிலும் அருளுக்குரியதாக அமைய துஆ செய்யுங்கள். அல்லாஹ் அதனை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. எவர்களுக்கு டியூட்டி கொடுக்கப்பட்டுள்ளதோ அவர்கள் தமது முழுமையான ஆற்றல்களுடன் தத்தமது டியூட்டினை சரிவர செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் சரியாக டியூட்டியை செய்வதற்கு அல்லாஹ் நற்பாக்கியம் வழங்க துஆவும் செய்யுங்கள். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு சிறந்த முறையில் தொண்டாற்றும் நற்பாக்கியத்தை அவர்களுக்கு வழங்குவானாக.

இந்த ஆண்டு போக்குவரத்து துறைக்கு சற்று அதிகமாக பணி செய்ய நேரிடும். மேலும் திட்டமும் வகுக்க நேரிடும். அதாவது இங்கு அமைந்துள்ள ஜமாஅத் தங்குமிடத்தில் விருந்தினர்கள் தங்குகின்றனர். அதாவது அவர்கள் ஜல்ஸாவிற்கு முன்பும் ஜல்ஸாவிற்கு பின்பும் சில நாட்கள் அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை செய்ய நேரிடும். எனவே நான் ஜல்ஸா ஸாலாவின் அதிகாரிகளிடம் திட்டமிடும்படி நான் கூறியிருந்தேன். அதன் அடிப்படையில் பணி தொடங்கி இருக்கும் என்று நான் நம்புகின்றேன். அல்லாஹ் அனைத்துப் பணிகளையும் அழகிய முறையில் நிறைவேற்றும் நற்பாக்கியத்தை அனைவருக்கும் வழங்குவானாக.

**மொழியாக்கம்: அப்துர் ரஹ்மான் தாஹிர்**